**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம் , நான்குநேரி**

**வழக்கு எண்:SC - 635 of 2024**

**வழக்கு சாட்சி:PW - 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செல்வ கண்ணகி | தேதி : | 06.08.2025 |
| கணவர் பெயர்: | சண்முகநாதன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. 1ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு - 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 06.08.2025.

**முதல் விசாரணை**

நான் சம்பவகாலத்தில் மறுகால் குறிச்சியில் என் அப்பா அம்மாவுடன் குடியிருந்து வந்தேன். தற்சமயம் நான் மஞ்சன்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். வழக்கில் உள்ள 1வது எதிரியையும் எனக்கு தெரியும். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. நான் அறிஞர் அண்ணா கல்லூரியில் B.Sc விலங்கியல் 2ம் ஆண்டு படித்து வந்தேன். என் அப்பாவிற்கு நாங்கள் மூன்று பேர். நான் மூத்தவள், இரண்டாவது என் தம்பி மற்றும் மூன்றாவது என் தங்கை ஆகும். நான் கல்லூரிக்கு பேருந்தில் சென்று வருவது வழக்கம். கடந்த 28.12.2018 மாலை சுமார் 3.45

மணியளவில் கல்லூரி முடிந்து பேருந்தில் நான்குநேரி வந்து அங்கிருந்து சொந்த ஊரான மறுகால் குறிச்சிக்கு மாலை 5 மணியளவில் டவுண் பஸ்சில் சென்றேன். தற்சமயம் நாங்கள் குடியிருந்து வந்த வடக்கு மீனவன் குளத்திற்கு என் அப்பாவிற்கு சொந்தமாக TN 72 AB 4700 என்ற பதிவெண் கொண்ட TVS இருசக்கர வாகனத்தில் நான் ஓட்ட பின்னால் என் சித்தி சொர்ணம் என்பவரின் மகன் முத்துப்பாண்டியும், என் உடன் பிறந்த தங்கை செல்வ வேணியும் பின்னாடி அமர்ந்திருந்தார்கள். சுமார் 5.30 மணியளவில் நான்குநேரி டோல்கேட் அருகே உள்ள Ex MLA, S.V.கிருஷ்ணன் தோட்டத்திற்கு தெற்கு பக்கம் உள்ள ஒத்தயடி பாதையில் 25 வயது மதிக்கத்தக்க நபர்கள் இரண்டு பேர் என்னை போகவிடாமல் வழி மறித்தார்கள் அவர்கள் வந்த TN 72 BW 9320 என்ற பதிவெண் கொண்ட கருப்பு கலர் இருசக்கர வாகனத்தில் ஆஜர் எதிரி என்னை கத்தியை காட்டி மிரட்டி காதில் கிடந்த 3 கிராம் எடையுள்ள தங்க கம்மலை கழட்ட சொன்னான். நான் உயிருக்கு பயந்து தரமாட்டேன் என்று சொல்லவும், மிரட்டியதும், உயிருக்கு பயந்து கையில் கம்மலை கழட்டி வைத்திருந்தேன். கையில் இருந்து பிடுங்கி கொண்டார்கள். அதில் வண்டியை ஓட்டிய நபர் அதிஸ் என்பவராகும். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. நாங்கள் மூவரும் ஐயோ கள்ளன் என்று கத்தவும், எதிரிகள் அவர்கள் வந்த வாகனத்தை எடுத்து விட்டு கிழக்கு நோக்கி சென்றுவிட்டார்கள். கம்மலின் மதிப்பு ரூ.7,500 இருக்கும். அதற்கு பின்பு என் பெற்றோர்களுக்கு பயந்து அவர்களுக்கு தெரிந்தால் கல்லூரி படிப்பை நிறுத்திவிடுவார்கள் என்று நினைத்து காதில் கவரிங் கம்மலை காதில் போட்டுக்கொண்டேன். காதில் கலர் மங்கியவுடன் என் தாயார் சந்தேகத்துடன் என்னிடம் கேட்டார். கடந்த 23.04.2019 ம் தேதி கல்லூரி முடிந்த மதியம் 4 மணிக்கு வீட்டிற்கு சென்றவுடன் எனது அம்மா கம்மல் ஏன் கலர் மங்கியுள்ளது என்று கேட்டவுடன் நான் நடந்த விவரத்தை அவரிடம் சொன்னேன். அன்று இரவு 7.30 மணிக்கு நான்

எனது தங்கை எனது அப்பா மூவரும் காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டதுதான். அதை நான் கைப்பட எழுதினேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். கடந்த 10.08.2019 ம் தேதி காவல் நிலையத்திற்கு அழைத்ததன் பேரில் சென்றேன். அங்கு நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி உள்ள 2 வது எதிரி அங்கு இருந்தார். அன்றைய தினமே ஒரு புகைப்படத்தை காவல் ஆய்வாளர் என்னிடம் காண்பித்தார். என்னிடம் காண்பித்த புகைப்படத்தில் இருந்த நபர்தான் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாத மற்றொரு எதிரி ஆவார். மேற்படி எதிரிகள் அன்றைய தினம் காவல் நிலையத்தில் வைத்து நான் காவல் ஆய்வாளரிடம் அடையாளம் காட்டினேன். என்னிடம் உள்ள கம்மலைத்தான் எதிரிகள் சம்பவ காலத்தில் என்னிடம் இருந்து பறித்து சென்ற கம்மல் ஆகும். அது சா.பொ.1 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் கத்தி சா.பொ.2 ஆகும். மேற்படி இரண்டு சொத்துக்களும் இன்று என்னால் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டப்பட்டது. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை** :

23.04.2019 ம் தேதி நான் என் அம்மாவிடம் சொன்னேன் என்று நான் சொல்லியதில் அது வரைக்கும் வேறு யாருக்கும் தெரியாது என்றால் என் தம்பி மற்றும் தங்கைக்கு மட்டும் தெரியும். நானும் வேறு யாருடனும் சொல்லவில்லை. என் தம்பி தங்கையும் யாரிடமும் சொல்லவில்லை என்றால் நான் சொல்லவேண்டாம் என்று சொன்னதால்சொல்லவில்லை. என்னுடைய கம்மல் மாடல் பெயர் மேரி கோல்டு என்பதாகும். மேற்படி கம்மலை நான் கல்லூரியில் படிக்கும் போது

2 வருடங்களாக போட்டுக்கொண்டிருந்தேன். கவரிங் கம்மலை சம்பவத்தின் மறுநாளே நான் வாங்கிவிட்டேன். மறுநாள் ஆரல்வாய்மொழியில் கல்லூரிக்கு அருகில் உள்ள கடையில் வாங்கினேன். மறுநாள் கம்மல் வாங்கும் வரையில் என் காதில் கம்மல் அணியவில்லை என்றால் நான் என் தங்கையின் கம்மலை வாங்கி மாட்டியிருந்தேன். என் தங்கை எந்த மாடல் கம்மல் வைத்திருந்தார் என்றால் ஜிமிக்கி மாடல் கம்மல் அணிந்திருந்தார். சம்பவம் முடிந்தவுடன் வீட்டிற்கு போகும் போது என் அம்மா அப்பாவை பார்த்தேன். என் அம்மா அப்பா நான் அணிந்திருந்த கம்மல் எங்கே என்றும் ஏன் தங்கையின் கம்மலை அணிந்திருக்கிறேன் என்றும் கேட்டார்களா என்றால் கேட்கவில்லை. சம்பவ காலத்தில் வடக்கு மீனவன் குளத்தில் குடியிருந்தேன். மீனவன் குளத்தில் இருந்து நான்குநேரிக்கு பஸ் ஏற வருவேன். வரும் போது என் அப்பாவின் XL ஐ எடுத்துகொண்டு வந்து பஸ் ஸ்டாப் அருகே உள்ள வாகன காப்பகத்தில் விடுவேன். நான் மட்டும் தனியாகவே வந்து போவேனா என்றால் என் தங்கையையும் அழைத்துவருவேன். வடக்கு மீனவன் குளத்திற்கு செல்வதற்கு தனியாக தார் சாலை உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து நான்குவழி சாலை பார்க்கும் தூரத்தில் இருக்கிறதா என்றால் ரொம்ப தெளிவாக இருக்காது. நான் வருவதற்கு முன்பாக எதிரிகள் நின்று கொண்டிருந்தார்களா என்றால் நான் போய் கொண்டிருக்கும் போது பின்னால் வந்தார்கள். எனக்கு சம்பவத்தின் போதே எதிரிகள் வந்த சென்ற வாகனத்தின் எண் தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய புகாரில் மேரி கோல்டு மாடல் நகை என்றும் எதிரிகள் வந்து சென்ற

வாகனத்தின் எண்ணையும் குறிப்பிட்டு எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை. பதட்டத்தில் இருந்தேன். புகார் மனுவை நான் என் கைப்படதான் எழுதினேன். சம்பவத்தை சொல்லும் போது வடக்கு மீனவன் குளத்தில் என் தாயார் வீட்டில் இருக்கும் போதுதான் சொன்னேன். அப்போது என் தந்தை வெளியில் இருந்தார். என் கம்மலை நான் வேறு எங்கோ தொலைத்துவிட்டேன் என்றும் அவ்வாறு தொலைத்ததை பெற்றோர்களிடம் சொன்னால் சத்தம் போடுவார்கள் என்பதால் மேற்படி கம்மலை யாரோ பறித்துகொண்டு போனதாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தம்பி தங்கைக்கு வயது என்ன இருக்கும் என்றால் என் தங்கை அப்போது 9 ம் வகுப்பும், என் தம்பி 8 ம் வகுப்பும் படித்து வந்தார்கள். என் தம்பி வீடு எந்த ஊரில் உள்ளது என்றால் வடக்கு மீனவன் குளத்தில் உள்ளது. நான் சொன்ன தேதி சொன்ன நேரத்தில் சம்மபவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் சொன்னது போலவே எனது முதல் விசாரணை சாட்சித்தை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் பெயர்கள் போலிசார் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான்.

**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம் , நான்குநேரி**

**வழக்கு எண்:SC - 635 of 2024**

**வழக்கு சாட்சி:PW - 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செல்வ வேணி | தேதி : | 06.08.2025 |
| தந்தை பெயர்: | வானுமாமலை | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(2 ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. 1ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு - 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 06.08.2025.

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் மறுகால் குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். சம்பவ காலத்தில் வடக்கு மீனவன் குளத்தில் குடியிருந்து வந்தேன். அ.சா.1 எனது உடன் பிறந்த அக்கா ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். வழக்கில் உள்ள 1வது எதிரியையும் எனக்கு தெரியும். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. நான் சம்பவ காலத்தில் நான்குநேரி அரசு மேல்நிலைப்பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வந்தேன். சம்பவ காலத்தில் என் அக்கா ஆரல்வாய்மொழியில் அறிஞர் அண்ணா கல்லூரியில் B.Sc விலங்கியல் 2ம் ஆண்டு படித்து வந்தார். கடந்த 28.12.2018 ம் தேதி மாலை சுமார் 3.45 மணியளவில் கல்லூரி முடித்து

பேருந்தில் நான்குநேரி வந்து அங்கிருந்து சொந்த ஊரான மறுகால் குறிச்சிக்கு மாலை 5 மணியளவில் டவுண் பஸ்சில் வந்தார். என் அப்பாவிற்கு சொந்தமாக TN 72 AB 4700 என்ற பதிவெண் கொண்ட TVS இருசக்கர வாகனத்தில் என் அக்கா ஓட்ட பின்னால் என் சித்தி சொர்ணம் என்பவரின் மகன் முத்துப்பாண்டியும், நானும் பின்னாடி அமர்ந்திருந்தோம். மாலை 5.30 மணியளவில் நான்குநேரி டோல்கேட் அருகே உள்ள Ex MLA, S.V.கிருஷ்ணன் தோட்டத்திற்கு தெற்கு உள்ள ஒத்தயடி பாதையில் சென்றுகொண்டிருந்த போது 25 வயது மதிக்கத்தக்க நபர்கள் இரண்டு பேர் என் அக்காவை போகவிடாமல் வழி மறித்தார்கள் அவர்கள் வந்த TN 72 BW 9320 என்ற பதிவெண் கொண்ட கருப்பு கலர் இருசக்கர வாகனத்தில் ஆஜர் எதிரி என் அக்காவை கத்தியை காட்டி மிரட்டி காதில் கிடந்த 3 கிராம் எடையுள்ள தங்க கம்மலை கழட்ட சொன்னான். என் அக்கா பயந்து போய் கம்மலை கழட்டி கையில் வைத்திருந்தார். நாங்கள் மூவரும் ஐயோ கள்ளன் என்று கத்தவும், எதிரிகள் அவர்கள் வந்த வாகனத்தை எடுத்து விட்டு கிழக்கு நோக்கி சென்றுவிட்டார்கள். ஆஜர் எதிரி என் அக்காவிடம் கத்தியை காட்டி மிரட்டி நகையை பறித்த நபர் ஆவார். இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாத எதிரி இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் ஆவார். கம்மலின் மதிப்பு சுமார் ரூ.7,500 இருக்கும். மேற்படி விஷயத்தை வீட்டில் சொன்னால் அக்காவை படிக்க வைக்கமாட்டார்கள் என்பதால் நானும் எனது தம்பியும் எனது அக்காவும் வெளியில் யாரிடமும் சொல்லவில்லை. அதன் பின்பு என் அக்கா அதேபோல் ஒரு கவரிங் கம்மலை வாங்கி கொண்டு காதில் போட்டுக்கொண்டார். அதன்பின்பு 23.04.2019 ம் தேதி அன்று மாலை சுமார் 4 மணியளவில் என் அம்மா என் அக்காவிடம் கம்மல் ஏன் கலர் மங்குகிறது என்று கேட்டதற்கு என் அக்கா நடந்த விவரத்தை சொன்னார். அதன்பின்பு நான் என் அக்கா, என் தந்தை ஆகியோர்கள் நான்குநேரி காவல் நிலையம் வந்து புகார் மனு கொடுக்க வந்தோம். என்அக்கா புகார்

மனு கொடுத்தார். அதன்பின்பு போலிசார் கடந்த 10.08.2019 ம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் காவல் ஆய்வாளர் அழைத்ததன் பேரில் நான், என் அக்கா, எனது தம்பி ஆகியோர்கள் சென்றோம். அங்கு ஆஜர் எதிரி காவல் நிலையத்தில் இருந்தார். அவர்தான் என் அக்காவை கத்தியை காட்டி மிரட்டி நகையை கையில் இருந்து பிடுங்கிய நபர் ஆவார். இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாத மற்றொரு எதிரியை காவல் ஆய்வாளர் புகைப்படத்தை எங்களிடம் காட்டினார்கள். அந்த புகைப்படத்தில் உள்ள நபர்தான் வண்டியை ஓட்டிய நபர் ஆவார். மேற்படி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி உள்ள எதிரியும், ஆஜர் ஆகாத எதிரியும் இன்று என்னால் நீதிமன்றத்தில் அடையாளம் காண்பிக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 சொத்துக்கள் இன்று நீதிமன்றத்தில் என்னால் அடையாளம் காட்டப்பட்டது. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை** :

நான் தற்போது கல்லூரி படிப்பு முடித்துள்ளேன். சம்பவத்தின் போது நான் 9 ம் வகுப்பு படித்தேன். நான்குநேரி அரசு மேல்நிலைப்பள்ளியில் படித்தேன். வழக்கமாக என் அக்கா என்னை பள்ளி முடிந்ததும் அழைத்து செல்வாரா என்றால் எனது அக்காதான் வீட்டிற்கு அழைத்து செல்வார். எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி சென்று கொண்டிருந்தோம் என்றால் தெற்கே இருந்து வடக்குநோக்கி சென்று கொண்டிருந்தோம். எதிரிகள் எங்களுக்கு முன்பாக நின்று கொண்டிருந்தார்களா என்றால் எங்கள் பின்னால்தான் வந்தார்கள். எதிரிகள் பைக்கில் இருந்து கொண்டே சம்பவத்தில் ஈடுபட்டார்களா அல்லது பைக்கில் இருந்து இறங்கி வந்தார்களா என்றால் இறங்கி வந்துதான் கத்தியை காண்பித்தார்.

அவர்கள் வந்த வண்டி TN 72 BW 9320 என்ற கருப்பு நிற பஜாஜ் பல்சர் வண்டியாகும். சம்பவத்தின் போதே பார்த்து நியாபகம் வைத்து கொண்டேன் என்றால் சரிதான். சம்பவத்தின் பின்பு நாங்கள் எங்கள் வீட்டிற்கு சென்ற போது எங்களுக்கு பயமோ பதட்டமோ கிடையாதா என்றால் இருந்தது. என் அம்மாவோ, அப்பாவோ ஏன் பதட்டமாக இருக்கிறீர்கள் என்று கேட்டார்களா என்றால் என் அப்பா வீட்டில் இல்லை. என் அம்மா கொஞ்சம் கழித்துதான் வீட்டிற்கு வந்தார்கள். சம்பவம் நடந்த பிறகு நான்கு மாதம் கழித்துதான் வீட்டில் சொன்னோம். என் அக்கா கவரிங் நகையை அடுத்த நாளே வாங்கி விட்டார். கவரிங் கம்மல் ஆரல்வாய்மொழியில் வாங்கினார். என்ன மாடல் கம்மல் என் அக்கா போட்டிருந்தார் என்றால் மாடலின் பெயர் எனக்கு தெரியாது. அது எப்படி இருக்கும் என்று எனக்கு தெரியும். அதே போல் கவரிங் வாங்கிவிட்டார். சம்பவம் நடந்த பின்பு கவரிங் நகை போடும் வரை அவரின் காதில் கம்மல் இல்லை என்றால் சரியல்ல. என் கம்மலை போட்டிருந்தார். நான் ஜிமிக்கி கம்மல் போட்டிருந்தேன். என் அம்மாவும் எனது அக்காவிடம் ஏன் ஜிமிக்கி கம்மல் போட்டிருக்கிறாய் என்று கேட்டாரா என்றால் கேட்கவில்லை. நான்கு வழி சாலையை சம்பவ இடத்தில் இருந்து பார்த்தால் தெரியுமா என்றால் தெரியாது. சுத்தி மரம் இருந்தது. நடந்த சம்பவத்தை என் தாயாரிடம் என் அக்காதான் சொன்னார் நான் அருகில் இருந்தேன். எந்த ஊரில் இருக்கும் வீட்டில் வைத்து சொன்னாள் என்றால் வடக்கு மீனவன் குளம் வீட்டில் வைத்து சொன்னார். நான், எனது அக்கா, தம்பி மற்றும் எனது அப்பா ஆகியோர்கள் காவல் நிலையம் சென்றோம். போலிசார் புகார் கொடுக்கும் போது எந்த

மாடல் கம்மல் எதிரிகள் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்று கேட்டார்களா என்றால் கேட்டார்கள். நாங்கள் அந்த விவரத்தை சொன்னோம். என் அக்கா எங்கேயோ கம்மலை தொலைத்துவிட்டார் என்றும் பெற்றோர்கள் கேட்கும் போது சத்தம் போடுவார்கள் என்பதால் கம்மலை பறித்து சென்றதாக பொய்யாக கூறினோம் என்றால் சரியல்ல. புகார்தாரர் என்னுடைய சகோதரி என்பதாலும், போலிசார் கேட்டுக்கொண்டதாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.